3rd March 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, ஒவ்வொரு ஆண்டும் 'இதற்கு முன் இருந்ததைவிட அதிகமாகக் கொள்முதல் செய்கிறோம்; அதிகமாக உணவு வினியோகம் செய்கிறோம்' என்று பேசியும், பத்திரிகையிலும் எழுதி வருகிறார்கள். ஆனால் அதற்கு மாறாக இப்போது கொள்முதலில் குறைந்து போனதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மூல பதிலிலேயே அடங்கியிருக்கிறது. சீர் கேடான பருவ நிலையே காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Taladi Crops

* 98 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the statement made by the mirasdars of Nagapattinam area of Thanjavur district that 500 acres of Taladi Crops withered away as a result of the non-supply of water and the non-supply of oil-engines by the Agriculture Department is true?

தாளடிப் பயிர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சை மாவட்ட நாகபபட்டினம் பகுதி மிராசுதார்கள் தங்களுக்கு தண்ணீர் விடாததாலும், விவசாய இலாகா எண்ணெய்ப் பொறிகள் வழங்காததாலும் 500 ஏக்கர் தாளடிப் பயிர் காய்ந்துவிட்டது எனக் கூறுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வட கிழக்குப் பருவ மழை தவறிவிட்டதாலும், மேட்டூரில் நீர்மட்டம் மிகவும் குறைந்து விட்டதாலும் (நாகப்பட்டினம் வட்டம் உட்பட), தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பாலும் காலம் கடந்து விதைத்த தாளடிப் பயிர் நீரின்மையால் பாதிக்கப்பட்டது. காலம் கடந்து விதைக்கப் பட்ட தாளடிப் பயிரைக் காக்க, பாசன வடிகால் வாயில்களிலிருந்து நீரை இறைப்பதற்கு வேளாண்மைத் துறையிடம் உள்ள எண்ணெய் இயந்திர விசையேற்றங்கள் அனைத்தையும் பயன் படுத்த எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டன. நாகப்பட்டினம் கோட்டத்தைப் பொறுத்தவயைில் இது காரியத்திற்கு 29 எண்ணெய் இயந்திரங்கள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டன; இதனால் 1,170 ஏக்கர் நிலம் பயனடைந்தது.

Fertiliser Mixtures

* 99 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) the firms which were granted permission to produce fertiliser mixtures in Tamil Nadu;